REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.P.

மலர் 41 சென்னை: தை 11ம் வியாழன் (24—1—57) ★ ★ வேலூர், தை 12ம் வெள்ளி (25—1—57) இதழ் 195

சப்பானிய முறையில் வேர்க்கடலை சாகுபடி செய்ய சிபாரிசு!

★

ஐதராபாத், சன. 23—

சென்னையிலும், ஆந்திராவிலும் பாசனக் கால்வாய் ஓரங்களில் சப்பானிய சாகுபடி முறையில் வேர்க்கடலை சாகுபடியைத் தீவிரமாக்க வேண்டுமென்றும், வேர்க்கடலை விதைப் பண்ணைகளை ஏற்படுத்த வேண்டுமென்றும் விவசாய ஆராய்ச்சிக் குழு சிபாரிசு செய்திருக்கிறதாம்.

காங்கிரஸ்-அகாலிதள உறவு முறிகிறது!

மோசடி செய்வதாக மேலிடத்தின் மீது தாராசிங் குற்றச்சாட்டு

பஞ்சாப் பிரதேச தேர்தலுக்கு கட்சி 'டிக்கட்' தருவதில் தகராறு

அகாலிகள் ஏமாற்றப்பட்டுள்ளனராம்

புதுடில்லி, சன. 23—

காங்கிரஸ்—அகாலி தள உறவு முறிந்துவிட்டதாகவே கருதப்படுகிறது

மாஸ்டர் தாராசிங், காங்கிரஸ் தலைமையின் 'மோசடி'யைப் பகிரங்கமாகவே கண்டித்திருக்கிறார்.

பஞ்சாப் பிரதேசத்தில் தேர்தலுக்கான காங்கிரஸ் அபேட்சகர் பட்டியல் வெளியிடப்பட்டதும் அதில் அகாலி தளத்தவருக்கு நியாயமான பிரதிநிதித்துவம் தரப்படவில்லை என்றும், எனவே காங்கிரசுடன் நமக்கிருக்கும் உறவை முறித்துக்கொள்ள வேண்டியது தான்—காங்கிரசை நாமே எதிர்ப்பதைத் தவிர வேறு வழியில்லை என்றும் தாராசிங் கூறியிருக்கிறார்.

பஞ்சாபில் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட அகாலிகளுக்கு சட்டசபைக்கு 23 இடங்களும், மக்கள் சபைக்கு 3 இடங்களுமே ஒதுக்கப்பட்டுள்ளன; இது போதுமானதல்ல; எங்களுக்குத் தந்த வாக்குறுதிகளை மேலிடம் மறந்து இப்போது மோசடியில் ஈடுபடுவதாக அகாலிகள் கூறுகின்றனர்.

பட்டியல் முடிவாக வெளியிடப்படுமுன் எங்களிடம் அதனைக் காட்டவே இல்லை என்றும், அவர்கள் குற்றம் கூறுகின்றனர்.

எனவே, காங்கிரஸ்—அகாலியின் இணங்கா உறவு, முறிந்துவிட்டதாகவே பார்வையாளர் கூறுகின்றனர்.

காங்கிரசை எதிர்த்து அகாலிகளே போட்டியிடுவார்போல் தெரிகிறது.

முக்கிய அறிவிப்பு

★

ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தபடி, தி. மு. க. அபேட்சகர் இரண்டாவது பட்டியல், 25—1—57 'நம் நாடு' இதழில் வெளிவராது. மாறாக, சென்னை 26—1—57 (வெளியூர் 27—1—57) இதழில் அந்தப் பட்டியல் வெளிவரும்.

தி. மு. க (தலைமை நிலையம்)

பல்கலைக் கழகங்களில் தமிழ் போதனாமொழி

நிதி அமைச்சரின் கூற்று

கோவை, சன. 23—

"தமிழ் அரசாங்க மொழியாக்கப்பட்டிருந்தாலும் பல்கலைக் கழகங்களில் தமிழைப் போதனா மொழியாக்குவதற்கு இன்னும் சிறிது காலம் ஆகும்,"

என்று, நிதி அமைச்சர் சுப்பிரமணியம் கூறியிருக்கிறார்.

தாய்மொழி மூலம் கல்வி கற்றுத் தருவதால் 'தரம்' உயருமே தவிர குறையாது என்றும் பிற மொழிகளின் தொல்லையிலிருந்து விடுபட்டு, பொருளை அறிய வசதி ஏற்படும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

பிலாய் தொழிற்சாலைக்கு இயந்திர சாதனங்கள்

இந்தியாவில், புதியதாகக் கட்டப்பட்டுவரும் பிலாய் இரும்பு, எஃகுத் தொழிற்சாலைக்கு அவசியமான மின்சார வெளிச்ச சாதனங்களை ரஷ்யாவிலுள்ள ரீகா மின்சார சாதனத் தொழிற்சாலை உற்பத்தி செய்துவருகிறதாம்.

ஜனவரி 8-ந் தேதியன்று இத்தொழிற்சாலை ஏராளமான மின்சார சாதனங்களை இந்தியாவிற்கு அனுப்பிவைத்ததாகக் கூறப்பட்டிருக்கிறது.

யெல்கேவ், லீப்பாயா, மற்றும் பல லாத்விய நகரங்களிலுள்ள தொழிற்சாலைகளும் இந்தியாவிற்குத் தேவையான சாதனங்களை உற்பத்தி செய்து வருகின்றனவாம்!

சென்னை - கிண்டியில் டைப்ரைட்டர் தொழிற்சாலை

300 பேர் பணியாற்றுவர்

சென்னை, சன. 22—

38 கிரவுண்டு பரப்பளவில் சுமார் ரூ. 25 இலட்சம் செலவில் கிண்டியில் நிறுவப்பட்டுவரும் தொழிற்சாலையொன்றில் ஹால்டா டைப்ரைட்டர் இயந்திரங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

இங்கு ஆண்டிற்கு 10,000 டைப்ரைட்டர் இயந்திரங்கள் உற்பத்தி செய்யப்படுமென்றும், 300 பேருக்கு வேலை கிடைக்குமென்றும் கூறப்பட்டிருக்கிறது.

சுவீடன் நாட்டு எஞ்சினியர்களின் உதவியுடன் இந்தி, தமிழ், தெலுங்கு மொழிகளிலும் டைப்ரைட்டர்கள் தயாரிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறதாம்.

'தென்னாட்டு மாநிலங்களை டில்லி அவமதிக்கிறது'

'விசைத்தறி எதிர்ப்பை அலட்சியம் செய்கிறது'

திரு. சோமப்பா கண்டனம்

ஹூப்ளி, சன. 23—

விசைத்தறிகளைத் திணிக்கும் பிரச்சினையில் தமிழ் நாடு, ஆந்திரப் பிரதேசம், கேரளம் போன்ற தென்னாட்டு மாநிலங்களின் கருத்தை அலட்சியப்படுத்தி, அவற்றை அவமதிக்கும் போக்கில் டில்லி நடந்துகொள்வதற்கு. அகில இந்திய கைத்தறி 'போர்டு' உறுப்பினரான சோமப்பா கண்டனக் குரல் எழுப்பியிருக்கிறார்.

"விசைத் தறி திணிப்பதை நான் எதிர்க்கிறேன். கைத்தறி வெகுவாகப் பரவியுள்ள ஆந்திரம், கேரளம், தமிழ் நாடு ஆகிய மாநிலங்கள், விசைத் தறித் திணிப்பை எதிர்க்கின்றன.

"இந்த மாநிலங்களின் கருத்தை, டில்லி சர்க்கார் அலட்சியப்படுத்துகின்றனர். சர்க்கார், கைத்தறி பரவாத — அதிகமாயில்லாத சில மாநிலங்களின் (வடநாட்டு) கருத்தை நம்பிக்கொண்டு, விசைத் தறித் திணிப்பில் ஈடுபடுவது கண்டு நான் வருந்துகிறேன்"

என்று, திரு. சோமப்பா அவர்கள், இங்கு நடைபெற்ற அகில கர்நாடக கைத்தறியாளர் மாநாட்டில் தலைமையுரை யாற்றும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

தேர்தல் அதிகாரியின் புனித போதனை!

காங்கிரசார் எத்தனை தூரம் மதிப்பர்?

அபேட்சகர் பற்றி வாக்காளர்கள் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்

அதிகாரிகள் கட்சிகளிடை பாரபட்சம் காட்டக்கூடாது-அபேட்சகர் கண்ணியமாக நடந்துகொள்ள வேண்டும்!

சுகுமார் சென் வானொலிப் பேச்சு

புதுடில்லி, சன. 23—

"வாக்காளர்களே! அச்சமேதுமின்றி உங்கள் வாக்குகளை பதிவு செய்யுங்கள்! அபேட்சகர்களே! கண்ணியத்தோடு நடந்துகொள்ளுங்கள்"

என்று, பிரதம தேர்தல் அதிகாரி சுகுமார் சென், தனது வானொலிப் பேச்சில் குறிப்பிட்டிருக்கிறார்.

'தேர்தல் இயக்கத்தையும், வாக்குச் சேகரிப்பதையும் கண்ணியமான முறையில், பாரம்பரியத்திற்கேற்ற வகையில் மேற்கொள்ளுங்கள்"

என்றும் அவர் எடுத்துரைத்திருக்கிறார், அபேட்சகர்களுக்கு!

அதிகாரிகளே!

"எந்தக் கட்சியினருக்கும் பாரபட்சம் காட்டாதீர்; கடமையிலிருந்து தவறாதீர்—

என்று, தேர்தல் வேலையில் ஈடுபடும் அதிகாரிகளுக்கு அடிக்கடி வற்புறுத்தி வந்திருக்கிறோம். அவர்கள், நேர்மையுடனும் பட்சபாதமின்றியும் நடந்துகொள்வார்கள் என்று நம்புகிறேன்"

என்றும் அவர் கூறியிருக்கிறார்.

வாக்காளர்களே!

"சுதந்திரமான பொறுப்புள்ள குடிமகன் என்ற நிலையில் ஒவ்வொரு வாக்காளரும், தனது ஓட்டுகளைப்பெற எவரேனும் தவறான வழியில் தன்னை அணுகினால், அதனை தனக்கு இழைக்கப்படும் அவமானமாகக் கருதவேண்டும்.

"வாக்காளர் அனைவரும் ஒவ்வொரு அபேட்சகரைப் பற்றியும் எச்சரிக்கையுடனிருக்கவேண்டும். தவறான வழி முறைகளைக் கைக்கொண்டு நமது பொது வாழ்க்கையில் நஞ்சு கலந்து

(4-ம் பக்கம் பார்க்க)

பி. சோ. கட்சி அந்நியப் பண உதவியால் இயங்குகிறதாம்!

திருமதி இந்திரா காந்தி பழிசுமத்துகிறார்

அலகாபாத், சன 22—

வெளிநாடுகளிலிருந்து பிரஜா-சோஷலிஸ்டுக் கட்சியினர் பண உதவி பெற்றுவருவதாகக் காங்கிரஸ் செயற்குழு உறுப்பினரான திருமதி இந்திரா காந்தி குற்றம் சுமத்தியிருக்கிறார்.

'இதுபோல அன்னியப் பண உதவி பெற்றுச் செயல்படுவது அந்தக் கட்சிக்குப் பெரும் அவமானமாகும்' என்றும் அவர் கூறினாராம்!

அமெரிக்கா போன்ற சில முதலாளித்துவ நாடுகளில் இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை அதிருப்தியை உண்டுபண்ணியிருப்பதால், அந்தக் கொள்கை பி. சோ. கட்சிக்குப் பிடிக்கவில்லை என்றும் திருமதி இந்திரா கூறினாராம்!

இங்கு காங்கிரஸ் தேர்தல் பிரச்சாரத்தைத் துவக்கிவைத்துப் பேசுகையிலேயே அவர் அவ்வாறு கூறினாராம்.

---

21 கோவா வீரர்கள் விடுதலையாயினர்?

சவந்த்வாடி, ஜன. 23—

கோவா சிறைகளில் வாடிக்கொண்டிருக்கும் 'சத்தியாக்கிரகி'களில் சுமார் 21 பேர், கடந்த சில நாட்களில் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றனர் என்று இங்கு தகவல் கிடைத்திருக்கிறது.

சாதிப் பாகுபாட்டினால் உரிமைபறிபோகாமல் இருக்க!

இலங்கை மேல்சபையில் மசோதா

சாதிப் பாகுபாடு காரணமாக எந்த ஒரு தனி மனிதனும், தான் அனுபவிக்க வேண்டிய உரிமைகளை எவற்றையும் பறிகொடுத்து விடாமல் காப்பாற்றிக் கொள்வதற்கான மசோதா ஒன்றினை, இலங்கை நீதி மந்திரி மேல் சபையில் கொண்டுவந்துள்ளாராம்.

இந்த மசோதா, தீண்டாமையைக் கடைப்பிடிப்பவர்களுக்கு 6 மாதக் காலம்வரை சிறைக் காவலோ, சிறைத் தண்டனையோ அல்லது ரூ. 100 வரை அபராதம் விதிக்கவோ, அல்லது இரண்டையும் சேர்த்தே விதிக்கவோ வழி வகை செய்கிறது.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 24—1—'57 வியாழன்

ஊசலாடும் உயிர்!

தமிழகத்தில் உள்ள சர்வ கட்சியினரும் ஒன்று கூடி, தாயகத்திற்குத் தமிழ் நாடு என்று பெயரிட வேண்டும் என்று கோரினார்கள். தாயக மக்கள் அனைவரும் கடந்த பிப்ரவரி 20-ல் கடைகளை அடைத்து வேலை நிறுத்தம் செய்து, பரிபூரணமான அர்த்தால் நடத்தி, சர்வகட்சியினரின் கோரிக்கை தங்கள் எழுச்சியின் விளைவே என்பதை எடுத்துரைத்தார்கள். தமிழ் மக்கள் அனைவருடைய ஒன்றுபட்ட குரலுக்குச் செவிசாய்க்க மறுத்துவிட்டது, காங்கிரஸ் ஆட்சி! மூன்று கோடி தமிழர்கள், ஆர்ப்பாட்ட ரூபத்தில் தங்கள் கோரிக்கையை வலியுறுத்தியதைத் துச்சமென மதித்து, அசைய மறுத்தது, காங்கிரஸ் ஆட்சி!

பின்னர், சங்கரலிங்கனார் எனும் விருதை வீரர்—பழம் பெரும் காங்கிரஸ் தியாகி இந்தக் கோரிக்கையைப் பிரதானப்படுத்தி, வேறு சில கோரிக்கைகளையும் முன் வைத்து உண்ணாவிரதம் மேற்கொண்டார்.

தமிழ் மக்கள் அனைவரையும் தனது அதிகார ஆணவத்தால் அவமதித்த காமராசர் ஆட்சி, தன் கட்சியைச் சேர்ந்தவர் என்பதையும் பழம் பெரும் தியாகி என்பதையும்கூட எண்ணிப் பார்க்க மறுத்து, அவரது உயிரைக் கொஞ்சம் கொஞ்சமாக — அணு அணுவாகக் குடித்து, சங்கரலிங்கனாரைக் கொன்றது; அது போதாது என்று ஆட்சியின் முதல்வரான காமராசர், 'சங்கரலிங்கனார் சாப்பிடாமலிருந்து செத்துப் போனார்' என்று பரிகாசம் செய்தார் — பிணத்தை வைத்துக்கொண்டு கேலி பேசினார் —தனது அதிகார ஆணவத்தின் எல்லையைத் தொட்டுக் காட்டினார்!

இப்போது, சங்கு - கணேசன் அவர்கள், கடந்த எட்டு நாட்களாக சங்கரலிங்கனாரைப் போலவே, தாயகத்திற்குத் தமிழ் நாடு என்று பெயரிட வேண்டும் என்ற தமிழ் மக்களின் ஏகோபித்த கோரிக்கைக்காகவும் வேறு சிலவற்றிற்காகவும் சென்னையில் உண்ணாவிரதம் துவங்கியிருக்கிறார்.

காமராசர் ஆட்சியின் ஆணவப் போக்கை உணர்ந்திருந்தும், சங்கரலிங்கனாரின் புனிதமான தியாகத்தை அவமதித்துக் கேலி பேசிய காமராசர்தான் இன்னும் ஆட்சியிலிருக்கிறார் என்பதை உணர்ந்தும் சங்கு கணேசன் அவர்கள் உண்ணாவிரதம் துவங்கியிருப்பது தமிழ் மக்களுக்குக் கவலையைத் தந்திருக்கிறது.

காமராசர் ஆட்சியின் மமதை—மக்களை மதியாத போக்கு—குடிமக்களை அவமதிக்கும் ஆணவம், பழம்பெரும் தியாகியான சங்கு கணேசனையும் எங்கே சாகடித்துவிடுமோ என்று மக்கள் கவலைப்படுகிறார்கள்.

தமிழ்நாட்டிற்குத் தமிழ்நாடு எனப் பெயரிட மறுப்பதற்கு என்னதான் காரணம் காட்டுகிறது, காமராசர் ஆட்சி? கேரளமும், ஆந்திரப் பிரதேசமும், தாங்கள் விரும்பும் பெயரால்—மொழிப் பெயரால் அழைக்கப்படும்போது, தமிழ் நாடு என்று நமது தாயகம் அழைக்கப்படுவதை, 'வேண்டாம்; தேவையில்லை,' என்று காமராசர் ஆட்சி கூறுவானேன்? தமிழர்களது இந்தக் கேள்விக்கு இன்னும் ஆட்சியாளர் பதில் தரவில்லை; ஆணவத்துடன் பேசிக்கொண்டிருக்கிறார்கள்!

'செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே' என்று பாரதியார் முழங்கிய கவிதை, காங்கிரஸ் ஆட்சியின் ஆணவத்தைக்கண்டு எள்ளி நகையாடுகிறது!

இவர்களது பிடிவாதமான ஆணவப்போக்கு, நமக்கு ஏற்கனவே எழுந்த சந்தேகத்தை வலுப்படுத்துகிறது.

தேர்தலுக்குப் பிறகு, 'தட்சிணப் பிரதேசம்' என்ற தமிழ் மக்களால் சாகடிக்கப்பட்ட திட்டத்தை உயிரூட்டி உருக் கொடுத்து உலவவிட, காமராசர்கள் மேலிடத்திற்குத் தலையாட்டியிருக்க வேண்டும் என்ற சந்தேகம்தான் அது! இல்லாவிட்டால், சங்கரலிங்கனார் உயிரைக் குடித்தது போதாது என்று, மற்றுமொரு தியாகியான சங்கு-கணேசன் அவர்களையும் அணு அணுவாகச் சாகடித்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பானேன்?

சங்கு கணேசன் தனது கோரிக்கைகளை முறையிட்டபோது, காமராசர், 'சாவது சுலபம்' என்று கூறினாராம்! மக்களை வாழவைக்க வேண்டிய பொறுப்பிலிருப்பவர், 'சாவது சுலபம்' என்றாராம்! ஆமாம்—நிச்சயமாக, காமராசர்கள் ஆட்சியில் வாழ்வதைவிட — அதுவும் தன்மானத்தோடு வாழ்வதைவிடச் சாவது சுலபம் தான்!

தமிழ்ப் பெருங்குடியினரே! தமிழர்தம் மரபுக்கு அழியாத களங்கம் தேடி வரும்—மானத்திற்குப் பங்கம் ஏற்படுத்தி வரும் இந்தத் தமிழ் நாட்டின் அவமானச் சின்னங்களான காமராசர்கள், இனியும் ஆட்சிப் பொறுப்பில் இருக்கத்தான் வேண்டுமா என்பதைச் சிந்தியுங்கள்.

சங்கு கணேசனின் உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கிறது! ஏற்கனவேயே நமது துணைப் பொதுச்செயலாளர், அவரைப் பார்த்து வந்தபொழுதே அவர் மிகவும் சோர்வுற்றுக் காணப்பட்டார்; 61 வயதைத் தாண்டிய அவர் உண்ணோன்பு தொடங்கி எழு நாட்களாகி விட்டன. பயங்கரமான சாவு அநியாயமாக அவரைத் தழுவிக் கொள்ளுமுன், அவர் காப்பாற்றப்படவேண்டும்.

ஆணவம் எனும் ஆரணங்கை ஆரத் தழுவிக் கொஞ்சிக் கொண்டிருக்கும் காமராசர் ஆட்சி, மமதை மஞ்சத்தை விட்டுக் கொஞ்சம் கீழிறங்கி வந்து, சங்கு கணேசனைக் காப்பாற்றப் போகிறதா, இல்லையா?—என்று குமுறும் நெஞ்சத்தோடு கேட்கிறோம்! 'இல்லை' என்பதுதான் பதிலானால்—'சங்கு கணேசன் சாகத்தான் வேண்டும்' என்று காமராசர் ஆட்சி கூறுமானால், விளைவு பயங்கரமானதாயிருக்கும் என்று எச்சரிக்கிறோம்; குமுறும் தமிழ் நெஞ்சம் மேலும் கொடுமைகளைத் தாளாது என்பதைச் சொல்லி வைக்கிறோம்.

தபால் நிலையத்தில் தபால் தலைகள் இல்லையாம்!

விசயநகரம், சன. 22—

உள்ளூர் தபால் நிலையங்களில், உஞ்சல் முத்திரைகள் கிடைக்கவில்லையாம்! இனி ஏப்ரல் திங்களில், தசாம்ச நாணய முறை அமுலுக்கு வரும்வரை புதிய சப்ளை இருக்காதாம்!

பாகிஸ்தானுக்கு இந்தியத் திரைப் படங்கள்

புதுடில்லி, சன. 22—

இந்தியாவுக்கும் — பாகிஸ்தானுக்குமிடையில் மேலும் அதிகமான அளவுக்கு வர்த்தகம் நடைபெற வழிகோலும் மூன்றாண்டு கால வர்த்தக ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தாகியுள்ளது.

இந்தியத் திரைப் படங்கள் பாகிஸ்தானுக்கு ஏற்றுமதியாக அதிக வசதிகள் அளிக்கப்படும்.

ஆண்டுக்கு 10 வங்காளி படங்களையும், 7 இந்திப் படங்களையும் வரவழைப்பதற்கு பாகிஸ்தான் அனுமதிக்கும்.

பாகிஸ்தானின் பிலிம்களை இறக்குமதி செய்ய இந்தியா இனி தாராள லைசென்சு அளிக்கும்.

மூன்றாண்டுக்கால வர்த்தக ஒப்பந்தம்

இந்தியா — பாகிஸ்தான் டில்லியில் கையெழுத்திட்டன

புதுடில்லி, சன 22—

பாரபட்சமாக எவரும் நடந்து கொள்ளாமலிருக்கும் அளவில், இந்தியா —பாகிஸ்தானுக்கிடையே ஏற்பட்டிருக்கும் மூன்றாண்டுக்கால வர்த்தக ஒப்பந்தத்தின் மூலம், நிலக்கரி, இரசாயன பொருள்கள், அட்டை வகைகள், இயந்திரங்கள், ஆலைக் கருவிகள், மின்சாரக் கருவிகள், சினிமாப் படங்கள், சர்க்கரை, பக்குவப்படுத்தப்படாத தேயிலை, காப்பி, வெற்றிலை, பீடிகள், உக்கா புகையிலை, பீடி இலைகள் முதலியன இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்கு ஏற்றுமதி செய்யப்படும்.

கச்சா சணல், ஆட்டுத் தோல், மாட்டுத்தோல், மீன், கோழி வாத்து, முட்டைகள், பாக்குத் தூளுக்கான வாசனைப் பொருள்கள், தேன், சினிமா படங்கள், இயந்திரக் கருவிகள், சைக்கிள்கள் —அதன் பாகங்கள், இரண சிகிச்சைக் கருவிகள், விளையாட்டுச் சாமான்கள் முதலியன பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும்.

மேலும் பாகிஸ்தானுக்கு மாதா மாதம் ஒரு இலட்சம் டன் நிலக்கரி விநியோகிப்பதற்கு இந்தியா ஒப்புக் கொண்டுள்ளது. மேற்கு பாகிஸ்தானுக்கு 55 ஆயிரம் டன் நிலக்கரியும், கிழக்கு பாகிஸ்தானுக்கு 45 ஆயிரம் டன் நிலக்கரியும் இந்தியா அனுப்பும்.

மேற்கு பாகிஸ்தான் 50,000 டன் சிமெண்டு இந்தியாவுக்கு அனுப்பும்.

இந்த ஒப்பந்தம் இரு சர்க்கார்களாலும் அங்கீகரிக்கப்பட வேண்டும்; பிப்ரவரியிலிருந்து அமுலாகும்.

கேட்டீரா, சேதி!

பம்பாயில் மொத்தம் 27,226 வாக்குப் பதிவு நிலையங்கள் இருக்குமாம்.

தேர்தல் அதிகாரிகளும், பணியாட்களுமாக மொத்தம் 1 இலட்சம் பேர் பணியாற்ற ஏற்பாடாகியுள்ளதாம்.

ஆசிரியருக்குக் கடிதங்கள்:

காங்கிரசார் ஆட்சியில் அரிசன மக்கள் படும் தொல்லை

ஐயா,

சென்னை மாதவரத்தையடுத்த எருக்கஞ்சேரி பகுதியில், சர்க்கார் புறம்போக்கு நிலத்தில் சுமார் 5-வருடங்களாகக் குடியிருந்து வருகிறார்கள், ஏழை அரிசன, தோல் பதனிடும் தொழிலாளிகள். அவ்வப்போது அரசாங்கம் விதித்து வரும் 'அபராத'த் தொகைகளையும் அவ்வப்போது அவர்கள் செலுத்தி வந்திருக்கிறார்கள். எனினும் சுமார் ஒரு வருட காலமாக யாரும் அத்தொகையை வசூலிக்காமற் போகவே, அவர்களும் வாளாவிருந்து விட்டனர். ஆனால், திடீரென்று கடந்த 20-ந் தேதி காலை அப்பகுதிக்குச் சில கிராம அதிகாரிகள் வந்து, 'அபராதத்தொகை பாக்கியிருக்கிறது; உடனே செலுத்த வேண்டும்' என்று கேட்டனர். எங்களுக்குப் பாக்கியிருப்பது தெரியாது; அப்படி இருந்தால் 10 நாள் அவகாசம் தாருங்கள்—செலுத்துகிறோம்' என்று ஆண்டி எனும் தோல் பதனிடும் தொழிலாளி ஒருவர் கூறினார். அவ்வதிகாரிகள் அதனை ஏற்றுக் கொள்ளாமல், அவரது கறவைப் பசுமாடு ஒன்றை அவர் இல்லாத சமயத்தில் ஓட்டிச் சென்றுவிட்டனர். அந்தப் பசுமாடு எங்கிருக்கிறது என்று இதுவரையிலும் தெரியவில்லை. ஏனெனில் இவ்வூர் கிராம அதிகாரி 'சஸ்பெண்டில்' இருக்கிறார்; யாரோ ஒரு புது அதிகாரி வந்து இப்படி 'தர்பார்' நடத்துகிறார்.

இதனால் மக்கள் இப்பகுதியில் ஆத்திரமடைந்திருப்பதுடன், 'அரிசன மக்களின் முன்னேற்றம்பற்றி வாயளவில் பேசும் காங்கிரஸ்காரர்கள் அரட்டும் ஒட்டுக்கு; பார்த்துக் கொள்ளுகிறோம்' என்று பேசிக் கொள்ளுகிறார்கள்.

செயலாளர்,
தோல் பதனிடும் தொழிலாளர் சங்கம், மாதவரம்

★

கண்ணைக் கெடுத்துவிட்டு

சூரிய வணக்கமா?

ஐயா,

பொத்தனூர், மற்ற சுற்றுப்புறக் கிராம மக்களாகிய நாங்கள் வெற்றிலைப் பயிரிடுதல் ஒன்றையே நம்பி வாழ்ந்து வருபவர்கள் ஆவோம். இத்தொழிலும், கடந்த ஐந்தாண்டுக் காலமாகப் பயிர்களுக்கு ஏற்பட்ட ஒருவித நோயால் பாதிக்கப்பட்டு, மிக்க அவதிப்பட்டுக்கொண்டு வாழ்க்கையை நடத்த முடியாமல் துன்பப்படுகிறோம். இந்நிலையை அரசாங்கத்திற்கு அறிவித்ததன் பலனாக இவ்வூரில் ஒரு மாதிரிப் பண்ணையை அமைத்து நோயைத் தடுக்கும் முறையைக் கண்டுபிடிக்க ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள்.

இராச வாய்க்காலில் வருகின்ற பிப்ரவரி 15-ம் நாள் தண்ணீர் வரப்போவதாகவும், ஒரு மாத காலத்திற்குத் தண்ணீர் வாய்க்காலில் வராதென்றும் அறிந்த நாங்கள் திருச்சிராப்பள்ளி காவிரி எக்சிகியூடிவ் எஞ்ஜினியர்' அவர்களுக்கு ஒரு விண்ணப்பம் கொண்டு வருகிறோம். ஒரு மாத காலத்திற்குத் தண்ணீர் வாய்க்காலில் வராதுபோனால், வெற்றிலைக் கொடிகள் காய்ந்து தீய்ந்துபோய் விடும். எங்களுக்கு வேறு எத்தொழிலும் தெரியாத காரணத்தால் வெற்றிலைக் கொடிக்கால் பயிரிடுவதையே நம்பி நீண்ட காலமாக வாழ்ந்தவர்களாவோம். அத்தொழிலும், நோயினால் பாதிக்கப்பட்டது போதாதென்று, வாய்க்காலில் தண்ணீர் வற்றிப்போய் அதனாலும் மீதமுள்ளவையும் காய்ந்துபோய்விட்டால் நாங்கள் வாழ்க்கையே நடத்த முடியாது என்ற நம்பிக்கையில் இதனை எஞ்சினியர் கவனத்திற்கு விடுகிறோம்.

ஆகவே, மராமத்து வேலைகளை விரைவாக முடித்துக்கொண்டு தண்ணீரை வாய்க்காலில் விரைவாக விட ஏற்பாடு செய்யவேண்டுமாறு எஞ்சினியரைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம். எவ்வளவுக்கெவ்வளவு தண்ணீரை வாய்க்காலில் விரைவாக விடுகிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு நாங்கள் பாதிக்கப்படுவதிலிருந்து தடுக்கப்பட்டவர்களாவோம்.

வெற்றிலைத் தொழிலுக்கு வளப்பத்தைத்தரும் எண்ணத்துடன் மாதிரிப் பண்ணையை அமைத்த சர்க்கார், வெற்றிலைக் கொடிக்குத் தினம் தேவைப்படும் நீரை நீண்ட நாட்களுக்கு இராச வாய்க்காலில் திறந்த ஏற்பாடு செய்யக் கருதியிருப்பது, மாதிரிப்பண்ணை அமைத்திருப்பதன் பயனையே அறியாதவர்களாயிருக்கிறார்கள் என்பதையே காட்டுகிறது.

மலை. சேகநாதன்,
பொத்தனூர்.

★

அவலநிலை போக்குவரா

ஆட்சியாளர்?

ஐயா,

பட்டுக்கோட்டைத் தாலுகாவைச் சேர்ந்த பேராவூரணிக்குத் தெற்கே ஏழாவது கல்லில் உள்ள பெருமகளூர் 'ரேஞ்சை'ச் சேர்ந்த பெருமகளூர், பெருமகளூர் தென் பகுதி, அராங்குடி, கலியாணராமநாதபுரம், பட்டங்காடு, முதுகாடு முதலான பகுதிகளில் உள்ள சுமார் 1,000 ஏக்கர் நெல் சாகுபடி செய்து கதிர் வெளிவரும் சமயத்தில் குருத்துப்பூச்சி, கொண்டைப் பூச்சி முதலியவைகள் வீழ்ந்து கதிர்களை நாசம் செய்துவிட்டன. நெல் சாகுபடி ஒன்றையே நம்பி வாழும் இவ்வட்டார விவசாய மக்கள் செய்வதறியாது கலங்குகின்றனர். சரியான விளைச்சலில் மூன்றில் ஒரு பங்குதான் இப்போது இருக்குமென மதிப்பிடப் பட்டிருக்கிறது. இந்நிலையில் அவதியுறும் மக்களுக்கு ஆவன செய்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதைப் பார்வையிட்டு, மக்களுக்கு வாழ வழி வகுத்துக் கொடுக்கக்கூடிய திட்டங்களைத் தீட்டி மக்களின் அவலநிலையைப் போக்கும்படி ஆட்சியாளர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ந. சோமசுந்தரம்,
பெருமகளூர் தென்பகுதி

★

ஆசிரியர்கள் கண்ணீர்

ஆட்சியாளர் கவனத்தை ஈர்க்குமா?

ஐயா,

குடியாத்தம் நகராண்மைப் பள்ளிக்கூடங்களில் வேலை செய்து வரும் ஆசிரியர்களுக்கு சென்ற ஆண்டு டிசம்பர் மாத ஊதியம் இன்றுவரை கொடுக்கப்படவில்லை.

என் ஜி.ஓ-க்களுக்கும் மற்ற அலுவலக ஊழியர்களுக்கும் விசேடப் பண்டிகை (தீபாவளி, பொங்கல்) முன்பணம், 'போனஸ்' இவையெல்லாம் வழங்கப்பட்டு வரும் நேரத்தில், ஏழை ஆசிரியர்களுக்கு, ஒழுங்காகக் கிடைக்க வேண்டிய மாதச் சம்பளமேகூடக் கிடைக்கவில்லை; அவர்களின் நிலை என்னாவது?

குடியாத்தம் நகராண்மைக் கழகத்தில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு ஒவ்வொரு மாதமும் சம்பளப் பட்டுவாடா காலதாமதமாகவே செய்யப்படுகிறது. காரணம், பணம் இல்லை என்பதுதான்; ஒவ்வொரு மாதமும் ஏதாவது கவர்ன்மெண்டு 'கிராண்ட்' எதிர்பார்த்து, அது வந்தபிறகு 15, 20, 25-ந் தேதிகளில்தான் ஊதியம் கொடுக்கப்படுகிறது. கடந்த 5, 6 வருடங்களாகவே இப்படித்தான் நடந்துவருகிறது.

(3-ம் பக்கம் பார்க்க)

தூத்துக்குடி உப்புத் தொழிலாளர் வெற்றி

தூத்துக்குடி, ஜன. 23—

தூத்துக்குடி உப்பு வியாபாரிகள் சங்கத்துடன், உப்புத் தொழிலாளர் சங்க நிர்வாகிகள் நடத்தின பேச்சு வார்த்தைகளில் வெற்றி கண்டிருக்கின்றனர்.

இவ்வாண்டுக்குக் கூலி, சென்ற ஆண்டில் கொடுத்தது போலவே வார் முதலுக்கு ரூ 1—12—0ம், மூடை சுமைக்கு எப்போதும் வழக்கமாகக் கொடுப்பதுபோல் தரவும் எழுத்து மூலம், வியாபாரிகள் சங்கத்தவர் ஒப்புதல் தந்துள்ளனர்.

இக்கூலி விகிதம் இவ்வாரத்திலிருந்தே தரப்படும் என்றும், எனவே உப்புத் தொழிலாளர் எவரும் குறைந்த கூலி வாங்க வேண்டாம் என்றும், தூத்துக்குடி உப்புத் தொழிலாளர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

மேலும், உப்புத் தொழிலாளர்களுக்கு அச்சங்கத்தவர் விட்டிருக்கின்ற ஒரு அறிக்கையில், "இதனைப் பயன்படுத்தி, சிலர் 'எங்களால்தான் இது முடிந்தது' எனக் கூறி உங்களிடம் பண வசூலுக்கு வருவார்கள்; அவர்களிடம் தொழிலாளர்கள் யாரும் ஏமாந்துவிடாமல், நமது உரிமைகளைப் பெறக் கட்டுப்பாடுடன் இருக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறோம்" என்றும் குறிப்பிட்டுள்ளனர். (ந. - கி.)

டாக்டர் அம்பேத்கார் இரங்கற் கூட்டம்

துணைப்பொதுச்செயலாளர் என். வி. நடராசன் கலந்து கொண்டார்

"டாக்டர் அம்பேத்கார் அவர்கள், 'தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் தலை நிமிர்ந்து வாழவேண்டும்; பொதுவாக மனிதகுலம் மேன்மையுற்றுத் திகழுதல் வேண்டும்' என்ற உயரிய பணியினை பலவித எதிர்ப்புகளுக்கிடையே செய்துவந்தார்கள். அவர் தமது வாழ்நாளில், செயலாற்றும் செம்மலாகவே வாழ்ந்தார். அவ்வித மேதையின் சமுதாயக் கொள்கையை திராவிடத்தில் வெற்றிபெறச் செய்வது திராவிட முன்னேற்றக் கழகமேயாகும்.

"நம் தாயகத்தில் தழைத்தோங்கிவரும் அறிவியக்கமும் அதன் கொள்கையும், டாக்டர் அம்பேத்கார் போன்ற மனிதகுல மேதைகளுக்குப் பெரும பக்கத் துணையாய் இருந்துவந்திருக்கிறது என்பதைத் தமிழகத்தின் கடந்தகால சம்பவங்களே நினைவூட்டும். எனவே, அறிவியக்க வளர்ச்சியின் எடுத்துக்காட்டாய் விளங்கும் திராவிட முன்னேற்றக் கழகம், டாக்டர் அம்பேத்கார் அவர்களின் உயரிய சமுதாயக் கொள்கையை நடைமுறைக்குக் கொண்டு வருவது மட்டுமல்ல—கழகத்தின் அடிப்படைக் கொள்கையும் அதுவேயாகும்.

"ஆகவே, தாழ்த்தப்பட்ட மக்களும் திராவிட முன்னேற்றக் கழகமும் உயிரும் உடலும் போன்றதற்கு ஒப்பாகும். கடந்த கால அரசியல் விவரங்களைப் புரிந்துகொள்ளும் ஆற்றலுடையவர்களும், இன்றைய அரசியல் பிரச்சினையை நேர்மையுடன் அலசிப் பார்க்கும் மனவளம் படைத்தவர்களும் நாங்கள் கூறும் இவ்வுண்மையை ஒப்புக்கொள்வர்.

"டாக்டர் அம்பேத்காரின் தூய்மையான பணி நமக்கெல்லாம் வழிகாட்டியாக அமையட்டும் என்று கூறி, அந்த மாவீரருக்கு எனது இறுதி வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்,"

என்று, கடந்த 20-ந் தேதியன்று மாலை சென்னை - நுங்கம்பாக்கம் அவின்யூ சாலைத் திடலில், அம்பேத்கார் வாலிபர் சங்கச் சார்பில் நடைபெற்ற அம்பேத்கார் மறைவு அனுதாபப் பொதுக்கூட்டத்தில் பேசின தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் குறிப்பிட்டார்.

மேற்படி கூட்டம் திரு அ. சிவராமசாமி தலைமையில் நடைபெற்றது. திரு சின்னக்குழந்தை, சுந்தரேசன், கிருஷ்ணமூர்த்தி, சிவசங்கரன், சுந்தரராசன், எஸ் பெருமாள், ஜே. தாஸ், அட்சயன், அ. நா. தி. மூர்த்தி ஆகியோர் பேசினர்.

கூட்டத்தில் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

தேர்தலில் காங்கிரசுக்குத் தக்கபாடம் கற்பிக்க வேண்டுகோள்

இணங்கனூர் தி. மு. க. பொதுக்கூட்டத்தில் அண்ணு, ஈ. வெ. கி. சம்பத், பொன்னம்பலனூர்

கரூர், சன 23—

அரவக்குறிச்சியை அடுத்த இணங்கனூரில் கடந்த 20-ந் தேதி அன்று இரவு கிளைக் கழகச் சார்பில் தோழர் என். இரத்தினம் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது

முதலில், தோழர்கள் ஈ. வெ கி. சம்பத், அ பொன்னம்பலனூர் ஆகியோர் பேசினபின், அண்ணு அவர்கள், தி. மு. கழகத் தேர்தல் பிரச்சாரத்தைத் துவக்கிவைத்து அரியதோர் உரை நிகழ்த்தினர்.

அண்ணு அவர்கள் தமது சொற்பொழிவில், அத்தொகுதியில் சட்டசபைக்குப் போட்டியிடும் தோழர் இரத்தினம் அவர்களையும், மக்கள் சபைக்குப் போட்டியிடும் தோழர் சம்பத் அவர்களையும் ஆதரித்து வெற்றி பெறச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டும், காங்கிரஸ் கட்சிக்குப் பலம் வாய்ந்த ஒரு எதிர்க்கட்சி தேவை என்பதையும், அந்த எதிர்க்கட்சியாக இயங்கத் தி. மு. கழகம் ஒன்றே தமிழகத்தில் இருக்கும் கட்சி என்பதை எடுத்துக்காட்டியும், காங்கிரசாருக்குத் தேர்தலில் பொதுமக்கள் சரியான பாடம் கற்பிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

மேலும் அண்ணு அவர்கள், 'இந்தக் கிராமத்தில் தேர்தல் பிரச்சாரத்தை ஆரம்பித்து வைப்பது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன்,' என்று குறிப்பிட்டார்கள். (ந கி.)

கூட்டுறவுச் சங்க உறுப்பினர் சேர்க்கும் விழா

கோவிலடி, சன. 23—

தஞ்சை மாவட்டம் கோவிலடி பலவித கோக்க கோவாப்பரேடிவ் கிரெடிட் சொஸைட்டியின் சார்பில் கூட்டுறவுச் சங்க உறுப்பினர் சேர்க்கும் வார விழா கடந்த 20-ந் தேதியன்று மாலை, திருக்காட்டுப் பள்ளி கூட்டுறவு சூபர்வைசிங் யூனியன் செயலாளர் திரு. சின்னத்தம்பி தலைமையில் நடைபெற்றது.

திரு வரதராசன், பாலகுரு ஆகியோர் கூட்டுறவுச் சங்கங்களின் தற்போதைய வேலைத் திட்டங்கள் குறித்தும் அவைகளில் உறுப்பினராகச் சேரவேண்டிய அவசியம் குறித்தும் எடுத்துரைத்தனர். (ந. - கி)

ஜப்பான் சர்க்காரின் அன்பளிப்பாக இந்தியாவுக்கு 300 சீமை இலந்தைச் செடிகள் வந்துள்ளன. மொத்தம் மூன்று இனங்களில் இனத்துக்கு நூறு செடி வீதம் வந்திருக்கின்றன.

அரவக்குறிச்சியில் கழகப் பொதுக்கூட்டம்

அண்ணு, சம்பத், மற்றும் முன்னணி வீரர்கள் கலந்துகொண்டனர்

கரூர், ஜன. 23—

கடந்த 20-ந்தேதியன்று மாலை கரூர் அரவக்குறிச்சியில், தி. மு கழகச் சார்பில் தோழர் எஸ். இராமசாமி அவர்கள் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், அ பொன்னம்பலனூர், என். இரத்தினம் ஆகியோர் சிறிதுநேரம் பேசியபின், அண்ணு அவர்கள் அரியதோர் உரை வழங்கினர்.

அண்ணு அவர்களுக்குப் பல மன்றங்கள், கிளை கழகங்கள் சார்பில் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

கூட்ட ஆரம்பத்திற்குமுன், அண்ணு அவர்களும் மற்றத் தோழர்களும் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

கூட்டத்தில் அண்ணு அவர்களிடம் தோழர் கஸ்தூரி, தி. மு. கழகத் தேர்தல் நிதியாக ரூ. 501 வழங்கினர்.

அதனை, அண்ணு அவர்கள் தோழர் என். இரத்தினம் அவர்களுடைய தேர்தல் செலவுகளுக்காக அவரிடம் அளித்தார்.

அன்று மாலை, அரவக்குறிச்சி ஊராண்மைக் கழகச் சார்பில் அண்ணு அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. (ந. கி.)

'வினோபா உழவர் சங்க'த் திறப்பு

கோவிலடி, சன. 23—

தஞ்சை மாவட்டம் கோவிலடி தெற்குத் தெருவில் வினோபா உழவர் சங்கம் ஒன்று நேற்று முன்தினம் திறக்கப்பட்டது.

மேற்படி சங்கத்தைத் திறந்து வைத்த திரு. கதிரேசன் அவர்கள், உழவர்களும் விவசாயமும் என்பது குறித்து விரிவாகப் பேசினர். மற்றும் இரா. சோமசுந்தரம், எம். திருவரங்கம் ஆகியோரும், இவ்வூர் பள்ளித் தலைமை ஆசிரியரும் விழாவில கலந்துகொண்டு உரை நிகழ்த்தினர். விழா முடிவில் சிறவர்களுக்கு இனிப்புகளும் தின்பண்டங்களும் வழங்கப்பட்டன.

விழாவிற்கு ஊராண்மைக் கழகத் துணைத்தலைவர் கா. பெரியசாமி அவர்கள் தலைமை வகித்தார். (ந-கி.)

நாடெங்கிலும் பொங்கல் நாள் விழா

இவ்வாண்டுப் பொங்கல் விழாவினையொட்டி நாடெங்குமுள்ள தி. மு. கழகக் கிளைகள், சார்பு மன்றங்கள், படிப்பகங்கள் ஆகியவை சார்பில் விழாப் பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள், இசை நிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்று மிகச் சிறப்பான முறையில் விழாக் கொண்டாடப்பட்டது. அந்நிகழ்ச்சிகளையெல்லாம், சுருக்கிக் கீழே தந்துள்ளோம் :—

பரமக்குடி :

14—1—57 அன்று ஊர்முழுவதும் தோரணங்களாலும் கழகக் கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. காலை 11 மணிக்கு கிளைக் கழகச் சார்பில் சுமார் 500 பேர்களுக்குப் பொங்கல் வழங்கப்பட்டது. மாலை 3 மணிக்கு தோழர் எஸ் தண்டபாணி தலைமையில் கிளைக் கழகத் தோழர்களின் அணிவகுப்பும், சிலம்ப விளையாட்டுகளுடன் ஊர்வலமும் நடைபெற்றது. இரவு 7 மணிக்குக் கிளைக் கழகத்தின் முன் தோழர் நாகலிங்கம் தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில் தோழர்கள் பலர் பேசினர்.

கோடல்வாவி :

14—1—57-ல் திண்டுக்கல் வட்டம் போளியம்மனூர் கோடல்வாவி கிளைக் கழகத்தில் கழகக் கொடி யேற்றப்பட்டது.

இராசபாளையம் :

14-1-57-ல், கிளைக் கழகத்தின் முன் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. தோழர்களுக்குப் பொங்கல் வழங்கப்பட்டது.

நீர்முளை :

14—1—57-ல் கிளைக் கழகச் சார்பில் விழாக் கொண்டாடப்பட்டது. தோழர் இ. கிருஷ்ணன் தலைமையில் தோழர் வ. சு. மணி கழகக் கொடியேற்றினர். தோழர் கே. பி. சரீப் சொற்பொழிவாற்றினர்.

வடுகபட்டி :

14—1—57ல், கிளைக் கழகச் சார்பில் பொங்கல் விழா நடைபெற்றது. பல போட்டிப் பந்தயங்கள் நடத்தி வெற்றி பெற்றோருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. விழாவிற்கு தோழர் பி சேகரன் தலைமை வகித்தார். தோழர் கோவிந்தராசலு பரிசு வழங்கினர். தோழர் இரெ. ஜெனார்த்தனம் கழகக் கொடியேற்றினர். தோழர்கள் வீ. கே. கோவிந்தன், மூவலன், இன்பசாகரன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். அன்றிரவு கழகத் தோழர்களால் 'தமிழ்ச் செல்வம்,' 'சாக்ரடீஸ்' நாடகங்கள் நடத்தப்பட்டன.

அம்மன்புரம் :

14—1—57ல் அம்மன்புரம் கிளைக் கழகச் சார்பில் கழகக் கொடிகளுடன் ஊர்வலம் நடைபெற்றது. பின்னர் கழகத்தின் முன் விளையாட்டுப் போட்டிகளும் நடைபெற்றன. சிறுவர்க்கு இனிப்புகளும் வழங்கப்பெற்றன.

தேவராப்பன்பட்டி

14—1—57 இரவு கிளைக் கழகச் சார்பில் தோழர் எம். இராமசாமி தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில் தோழர்கள் சி. இருளப்பன், எம். பாலுசாமி, பி பாலசுப்பிரமணி ஆகியோர் பேசினர். அனைவருக்கும் பொங்கல் வழங்கப்பட்டது.

சேலம்—சாமிநாதபுரம்

15—1—57 காலை 8 மணிக்கு கிளைக் கழகத்தில் தோழர் கே. வீ. குப்புசாமி தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில் தோழர்கள் பி. கே சித்தையன், எம். எம். அருணாசலம், பி. கே. சின்னையன், கே பி. சந்திரையா ஆகியோர் பேசினர்.

மண்பறை

14—1—57 காலை 11 மணிக்கு கழக இல்லத்தில் கொடியேற்றப்பட்டு அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டன. 15—1—57 மாலை 6 மணிக்கு தோழர் பசவலிங்கம் தலைமையில் ஊர்வலம் நடைபெற்றது.

ஆனைமலை

19—1—57 மாலை, தோழர் சண்முகநாதம் தலைமையில் நடைபெற்றது தோழர்கள் துரைக்கண்ணு, மு. வசனப்பித்தன் ஆகியோர் பேசினர்.

கடலூர் :

பொங்கல் விழாவன்று கடலூர் அழகிரி நகர் தி மு க. கழகத்தில் தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ. கழகக் கொடியேற்றி கிளைக் கழகத்தைத் திறந்துவைத்தார்.

• • •

வண்டிப்பாளையத்தில் தோழர் இரெ. இளம்வழுதி அவர்கள் கழகக் கொடியேற்றி வைத்து கிளைக் கழகத்தைத் திறந்துவைத்தார். பல இடங்களில் தோழர் கோவிந்தன் கொடியேற்றிவைத்தார்.

* * *

18—1—57-ல் மஞ்சை நகர் மைதானத்தில் தோழர் இரா. சாம்பசிவம் தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில், தோழர்கள் முருகுணநிதி, இரெ. இளம்வழுதி, ஏ கோவிந்தசாமி எம்.எல்.ஏ., ச. சிவப்பிரகாசம் ஆகியோர் பேசினர்.

குணியமுத்தூர் :

20—1—57 மாலை 6 மணிக்கு கிளைக் கழகச் சார்பில், தோழர் மே. சி. சிதம்பரனூர் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் க. ஜனார்த்தனம், தங்கமாணிக்கம் ஆகியோர் பேசினர். பேச்சு, பாட்டுப் போட்டிகள் நடைபெற்று, வெற்றி பெற்றோருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

கரூரில் நகராண்மைக் கழக தொழிற்சங்க திறப்பு

கரூர், சன. 20—

கரூர் நகராண்மைக் கழகத் தொழிற் சங்கத் திறப்பு விழா, இன்று, நகராண்மைக் கழகத் துணைத் தலைவர் திரு. வெங்கடாசலம் தலைமையில் நடைபெற்றது.

யூனியனை, தி. மு. கழகத் தோழர் எம். குழந்தைவேல் எம். சி, திறந்துவைத்தார்.

தோழர்கள் கே. எஸ். இராமசாமி எம் சி., டி. நாராயணசாமி. பசுபதி, சாம்பசிவம் ஆகியோரும் பேசினர். (ந. - கி)

மதனஞ்சேரி கிராம முன்னேற்ற சங்கம்

மதனஞ்சேரி, சன. 23—

வட ஆற்காடு மாவட்டம் மதனஞ்சேரியில், நேற்று கிராம முன்னேற்ற சங்கத்தின் சார்பில் திரு. சென்னராயர் தலைமையில் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. வ. ஆ. மாவட்டம் பாலாறு விவசாயிகள் சங்கச் செயலாளர் வி. என். தத்தப்பன், திரு டி. மாணிக்கம் மற்றும் பலர் கிராம முன்னேற்றம் குறித்துப் பேசினர். கூட்டத்தில் ஏராளமான விவசாயிகளும் தாய்மார்களும் கூடியிருந்தனர். (ந-கி.)

ஆசிரியருக்குக் கடிதம் :

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஒவ்வொரு வருடமும் தவறாது 'ஆடிட்' நடக்கிறது; கலெக்டரால் விவரமாக அறிக்கையும் சமர்ப்பிக்கப்படுகிறது; இருந்தும் என்ன பயன்? இத்தகைய மோசமான நிலைமைக்கான காரணத்தைக் கண்டுபிடித்து அக்குறையைத் தீர்க்க யாதொரு நடவடிக்கையும் இதுவரை எடுக்கக் காணோம்.

அரசாங்கம்—குறிப்பாக முதலமைச்சர் திரு கே. காமராசர் இத்தொகுதியிலிருந்து சட்டசபைக்கு அனுப்பப்பட்டவர் என்பதற்காகவாவது இவ்விஷயத்தில் கவனம் செலுத்தி, நிரந்தரப் பரிகாரம் செய்வார் என்று எதிர்பார்க்கலாமா?

'பாதிக்கப்பட்டோன்'
குடியாத்தம்

'நான்கடவுள்' என்றுகூறிக்கொண்ட 'சாது'வின் அட்டகாசங்கள்!

8 போலீசார், 7 கிராமவாசிகள் பலி

வடநாட்டுக் கிராமத்தில் சம்பவம்

இலட்சுமணபுரி, சன. 23—

'நான் கடவுள்' என்று கூறிக்கொண்ட 'சாது' ஒருவனை இருவர் வணங்க மறுத்ததின் விளைவாக எட்டு போலீசாரும் ஏழு கிராமவாசிகளும் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

மொராதாபாத் மாவட்டத்தில் முகீப்பூர் கிராமத்தில் 'சாது' என்று சொல்லிக்கொள்ளும் ஒருவரை, வழியில் சென்ற இருவர் வணங்க வேண்டுமென 'சாது'வின் சீடர்கள் வற்புறுத்தினராம். அவர்கள் மறுக்கவே, அவர்களை, சீடர்கள் காயப்படுத்தினராம். தாக்கப்பட்ட இருவரும் பக்கத்தில் இருந்த கிராமப் போலீசில் புகார் செய்திருக்கின்றனர்.

உடனே ஒரு சப்-இன்ஸ்பெக்டரும் இரு கான்ஸ்டபிள்களும் அங்கு சென்றபோது, அவர்கள் மூவரும் 'சாது'வின் சீடர்களால் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்டனராம்.

பின்னர் செய்தியறிந்து மேலும் ஒரு உயர்தர அதிகாரி உட்பட நான்கு போலீசார் சென்றபோது, அவர்களும் பயங்கரமான ஆயுதங்களால் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

தகவல் கிடைத்ததும் பெரும் பட்டாளமாகப் போலீசார் சென்றபோது, கிராமவாசிகள் அனைவரும் கூடி போலீஸ் பட்டாளத்தை எதிர்த்துத் தாக்கினராம். இருதரப்பாரும் நடப்பாகிய சண்டையில் ஈடுபட்டு பலத்த சேதமுற்றிருக்கின்றனர்.

இறுதியாகப் போலீசார் கிராமத்தையே சுற்றி வளைத்துக்கொண்டு சாது, 20 பெண்கள் உட்பட 39 பேர்களைக் கைது செய்திருக்கின்றனர். நிலைமை அமைதியாகி வருகிறதாம்.

'கடவுள்' என்று துணிவோடு கூறிக்கொண்டு இத்தனை அட்டகாசம் செய்தவர்கள் இந்த நாற்றுண்டிலும் இருக்கிறார்களே!

கிராமவாசிகளில் 7 பேர் பலியானதுடன், பலருக்குப் படுகாயங்களும் ஏற்பட்டனவாம்.

ஆந்திரத்தில் கள் இறக்குவோர் போராட்டம்

200 பேர் கைது

வாரங்கல், சன. 22—

ஆந்திர மாநிலத்தில் வாரங்கல் நகர் சுற்றுப்புறத்தில் உள்ள 12 கிராமங்களில் சுமார் 200 கள் இறக்கும் தொழிலாளர்கள் லாயிசென்ஸ் சட்டத்தை மீறி கைதாகியுள்ளனர்.

கள் இறக்க உரிமை பெற்ற காண்டிராக்டர், ரூ 2 இலட்சம் முன்பணமாகக் கட்டினால் கள் இறக்கும் உரிமையை கள் இறக்கும் சங்கத்திற்கே மாற்றித்தருவதாக ஒப்புக்கொண்டாராம்.

கள் இறக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள 2000 குடும்பங்கள் தங்கள் சொத்துக்களை அடகு வைத்தும் விற்றும் ரூ. 2 இலட்சம் கட்ட முன்வந்தனர்.

ஆனால் காண்டிராக்டர், முதலில் கூறிய உறுதிமொழியை நிறைவேற்ற மறுத்துவிட்டாராம்; இதனால் கள் இறக்குவோர் குடும்பங்கள் பாதிக்கப்பட்டனவாம்.

சட்டத்தின் மூலம் இந்த விஷயத்தில் எதும் செய்யமுடியாதென்றும் தீர்வு முடியாதென்றும் ஆந்திர அரசாங்கம் அறிவித்துவிட்டதாம்.

சங்கத்தின் சார்பில் தலைமைச்செயலரும் காங்கிரஸ் தலைவர்களும் கண்டு முறையிட்டும் பயனில்லையாம்.

கள் இறக்கும் தொழிலாளிகள் வேலைக்குச் செல்லாமல், ஊர்வலமாகச் சென்று அமைதியாகப் பல தொழிற்சங்கங்கள் அனுதாப வேலை நிறுத்தம் செய்கின்றன.

அரசாங்கம் தலையிட்டு, கள் இறக்கும் தொழிலாளிகளுக்கு நீதி வழங்கவேண்டுமென்று பல முறையிட்டிருக்கின்றனர்.

மாணவர்கள்மீது கண்ணீர்ப் புகை வீச்சு

திருவனந்தபுரம், சன 23—

இன்று இங்கு மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போது சிலர் கல்லூரி டெலிபோன் கம்பிகளைத் துண்டித்ததுடன், போலீஸ் லாரி மீதும் கற்களை வீசினராம்.

ஆர்ப்பாட்டக்காரர்களைப் பயமுறுத்த போலீசார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை உபயோகித்ததாகச் செய்திகள் கூறுகின்றன.

மாணவர்களல்லாதவர் என்று சொல்லப்படும் 12 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

தேர்தல் அதிகாரியின்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தாக்குறைவான தாக்கும் எந்த அபேட்சகரின் முயற்சியையும் வாக்காளர் ஈவிரக்கமின்றிக் கண்டித்து தொறுக்கவேண்டும். வாக்காளர்கள் ஒவ்வொரு அபேட்சகரின் நடவடிக்கைகளையும் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கவேண்டும்," என்றும் தேர்தல் அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மத்தியகிழக்கு நாடுகளுக்கு அணுகுண்டுகளா?

வாஷிங்டன், சன 23—

'கம்யூனிஸ்டுகளால் மத்திய கிழக்கில் தாக்குதல் ஏற்பட்டால், உதவிக்காக அங்கு அணுகுண்டுகள் அனுப்பப்படுமோ?' என்று கேட்கப்பட்டபோது, அமெரிக்கத் தலைவர், மத்தியக் கிழக்கு பற்றி தற்போது ஒன்றும் கூறுவதற்கில்லையென்றும், அமெரிக்க இராணுவ உதவிச் சாதனங்களில் சிறிய அளவுள்ள அணு ஆயுதங்களும் இருக்குமென்றும், அவைகளை அநேகமாகப் பயன்படுத்த நேரிடுமென்றும் கூறியுள்ளார்.

இஸ்ரேல் பிரதமரின் பிடிவாதப் போக்கு!

இஸ்ரேல், சன. 21—

சூயஸ் கால்வாயில் இஸ்ரேல் கப்பல் போக்குவரத்துச் சுதந்திரத்திற்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டாலொழிய, அகாபா வளைகுடாவிலிருந்து இஸ்ரேல் படைகள் வெளியேறு என்று இஸ்ரேல் பார்லிமெண்டில் பிரதம மந்திரி பென் குரியன் கூறினாராம்.

எம். என். ராய் நினைவு தினம்

★

26—1—57 மாலை 5-மணிக்கு, சென்னை-நுங்கம்பாக்கம் சமூகநல மன்றச் சார்பில், குமரப்ப முதலி தெரு, எண் 11 இல்லத்தில் திரு. எம். என். ராய் அவர்கள் நினைவு நாள் கூட்டம் நடைபெறும்.

கழகக் கூட்டங்கள்

★

பெங்களூர்:
பிளாக்பள்ளி சழகக் கட்டிட எதிரில்
27—1—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: கி. சோழன்
பேசுவோர்:
ச. அறிவழகன்
வே. இளஞ்சேரன்
ஜி. கிருட்டிணன்

★

பழைய கும்மிடிபூண்டி:
26—1—57 மாலை 4 மணிக்கு
தி. மு க 5-வது ஆண்டுவிழா
தலைவர்: டி. மாரிமுத்து
பேசுவோர்:
நா. எல்லப்பன், ப. சு. மணி
ஏ. சு. மணி, ஆ. கிருஷ்ணன்

★

சென்னை- நுங்கம்பாக்கம்:
அப்பாசாமி முதலி தெருவில்
26—1—57 மாலை 6 மணிக்கு
34-வது வட்ட தி மு கழக 7-வது ஆண்டுவிழா
தலைவர்: ஜே எஸ். இராசன்
பேசுவோர்:
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
என். சீவரத்தினம்
ஏ. கே. சாமி
வ. சங்கரநாராயணன்
டி. எஸ். கிள்ளிவளவன்

★

காவேரிநகர்:
தி. மு. சழகக் கட்டிட அருகில்
தி. மு கழகத் துவக்க விழா
26—1—57 மாலை 4 மணிக்கு
தலைவர், கொடியேற்றுபவர்:
கே. வி. சுப்பையா
பேசுவோர்:
என். வி. நடராசன்
கே. எஸ். சந்தானம்
நாகராசன்

★

இராசிபுரம்:
புதசந்தைப்பேட்டையில்
25—1—57 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
கே. வி. கே. இராமசாமி

சென்னை கே. வி. கே. சாமி நினைவுப் படிப்பகச் செயற்குழு உறுப்பினர்கட்கு:

26—1—57 காலை 8 மணியளவில் சென்னை - தூளை கல்யாண மேஸ்திரி தோட்டம் மேற்படி படிப்பகத்தில், படிப்பகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். படிப்பக வரவு - செலவு, மற்றும் சில முக்கியப் பிரச்னைகள் ஆய்வுக்கெடுத்துக்கொள்ளப்படும்.

தின்னனூருக்கு அண்ணா வருகை

26—1—57 மாலை 5-மணிக்கு ஸ்ரீபெரும்புதூர் தொகுதி தின்னனூர் தர்மராசாகோயில் திடலில், தோழர் தி. வெங்கடாசலம் தலைமையில் தி. மு. கழகத் தேர்தல் நிதி அளிப்புப் பொதுக்கூட்டம் நடைபெறும்.

அண்ணா அவர்களும், தோழர்கள் சி. வி. எம். அண்ணாமலை, கோ. செங்குட்டுவன், கௌதமன் ஆகியோரும் சொற்பொழிவாற்றுவர்.

நிலக்கோட்டை தொகுதி தி மு க. கிளைச் செயலாளர்கட்கு:

27—1—57 காலை 10-மணிக்கு அம்மையநாயக்கனூர் தி மு கழக இல்லத்தில் நிலக்கோட்டை தொகுதிக்குழு உறுப்பினர் கூட்டம் நடைபெறும். தேர்தலையொட்டி தொகுதிக்குழு அமைக்க வேண்டியிருப்பதால், தொகுதியிலுள்ள கிளைச் செயலாளர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் அவர்களும் கலந்துகொள்வார் என அறிவிக்கப்படுகிறது.

சென்னை 2-வது வட்ட செயற்குழு உறுப்பினர்கட்கு:

25-1-57 மாலை 5 மணிக்கு கிளைக் கழகப் பணிமனையில் (மன்ரோ ராமர் கோயில்தெரு, எண் 100) கிளைக் கழக அவசரச் செயற்குழு கூட்டம் நடைபெறும்.

சென்னை 31-வது வட்ட தோழர்களுக்கு:

26—1—57 காலை 9 மணிக்கு காசப்ப முதலித் தெரு, எண் 12 இல்லத்தில், பொதுத் தேர்தல் ஆலோசனைக் கூட்டம் நடைபெறும். வட்டாரப் பெரியோர்களும், கழக முக்கியஸ்தர்களும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பாப்பநாயக்கன்பாளையத்தில் தேர்தல் பொதுக்கூட்டம்

26-1-57 மாலை 6 மணிக்கு, பாப்பநாயக்கன்பாளையம் திரு. வி. க. திடலில் தோழர் நா. சுப்பையா தலைமையில் தி. மு. கழகத் தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டம் நடைபெறும் தோழர்கள் சிற்றுளி-சுப்பிரமணியம், எம் எம் சண்முகசுந்தரம், ஆர். கே. சடையப்பன் பேசுவர்.

லால்குடி தொகுதி புள்ளம்பாடி பிர்க்கா தி. மு. க. தோழர்களுக்கு

25-1-57 காலை 10 மணிக்கு கல்லக்குடி தி. மு. கழக அலுவலகத்தில், மேற்கண்ட பிர்க்காவைச் சேர்ந்த கிளைக் கழகச் செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், கழக ஆதரவாளர்கள் கூட்டம் நடைபெறும். தேர்தலில் செயலாற்றவேண்டிய முறைபற்றி ஆலோசிக்கப்படும்.

சென்னை 25-வது வட்ட தி. மு. கழகப் பொது உறுப்பினர்களுக்கு

27-1-57 காலை 9 மணிக்கு சென்னை—புரசை, வெள்ளாளத் தெரு எண் 10. தோழர் க. அன்பழகன் இல்லத்தில் கிளைக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும். பொதுத் தேர்தலில் கழகத் தோழர்கள் கடமை—தேர்தல் குழு அமைத்தல் பணியாற்றுவது குறித்து ஆலோசிக்கப்படும்.

சென்னையில் பொதுக்கூட்டம்

26-1-57 மாலை 6 மணிக்கு சென்னை 21-வது வட்டம் அயன்புரம் பாரதிதாசன் நூல் நிலைய சார்பில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் ஏ. வி. பி ஆசைத்தம்பி, தோழியர் சத்தியவாணிமுத்து பேசுவர். கூட்டத்தில் 21-வது வட்டத் தி. மு கழகக் கிளைச் சார்பில் தி. மு கழகத் தேர்தல் நிதி வழங்கப்படும்.

பால்செட்டி சத்திரத்திற்கு அண்ணா வருகை

25—1—57 மாலை 6-மணிக்கு காஞ்சியை அடுத்த பால்செட்டி சத்திரத்தில் நடைபெறும் கிளைக் கழக ஆண்டு விழாப் பொதுக்கூட்டத்தில் அண்ணா அவர்கள் கலந்து கொள்வார்கள்.

விழாவிற்குத் தோழர் சி. வி. எம். அண்ணாமலை எம். சி., தலைமை தாங்குவார்.

காஞ்சி நகர்மன்றத் துணைத் தலைவர் அ. க. தங்கவேலர், தோழர் சி. வி. இராசகோபால் ஆகியோர் பேசுவர்.

அண்ணாமலைநகரில் பொங்கல் விழா

26, 27—1—57 ஆகிய இரு நாட்களிலும் அண்ணாமலை நகர் தி மு. கழக மாணவர் கிளையின் சார்பில், திருவேட்களக்குளக்கரையில் விழாக் கொண்டாடப்பெறும்.

முதல் நாளன்று மாலை 4½ மணியளவில், நாகூர்-அனிபா அவர்களின் இசை நிகழ்ச்சி நடைபெறும்.

தோழர்கள் டி. கே சீனிவாசன், கி மனோகரன் சொற்பொழிவாற்றுவர்.

மறுநாள் மாலை 4½ மணிக்கு, தோழர்கள் டி. நாராயணசாமி, சுந்தரேசன் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெறும்.

தோழர்கள் கண்ணதாசன், ஏ கே. வில்வம் பேசுவர்.

தமிழ் நாடு சாக்குத் தொழிலாளர் சம்மேளன முதல் மாநாடு

26, 27—1—57 ஆகிய இரு நாட்களில் தமிழ் நாடு சாக்குத் தொழிலாளர் சம்மேளன முதல் மாநாடு, திருச்சி சின்னையா பிள்ளை சத்திரத்தில் திரு ஆர். கணபதி தலைமையில் நடைபெறும். 26—1—57ல், பிரதிநிதிகள் மாநாடும், 27-ம் தேதி பொது மாநாடும் நடைபெறும். திரு ஆர். தெய்வம் வரவேற்புரையாற்றுவார். திரு எம். கல்யாணசுந்தரம் கொடியேற்றுவார். திரு டி. எம். நல்லுசாமி மாநாட்டைத் திறந்து வைப்பார். தோழர்கள் அ பெ. சருமலிங்கம் (திருச்சி மாவட்ட தி. மு. க. செயலாளர்), சேலம் காளிதாஸ்சேட், பி ஆர். இராமசாமி, எம். மாயாண்டி, எம். ஏ. பி எம். அப்துல்கனி, பி. கே. ஏ. பாலராஜ் ஆகியோர் பேசுவர்.

27-ம் தேதி மாலை 6½ மணிக்கு குருவியாக்குளம் மைதானத்தில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் பலர் பேசுவர்.

சென்னை திருவள்ளுவர் கழகம்

26-1-57 மாலை 6½ மணிக்கு சென்னை—சூளை மாணிக்கச்செட்டித் தெரு, எண் 10. கழக மனையில், திரு ந. இராசகோபாலன் அவர்கள் 'பெருநாவலர்' எனும் பொருள் குறித்துப் பேசுவார்.

'சுதந்திரம்' தமிழ் நாளிதழ்

சென்னை, சன. 24—

தோழர் கே. அருணாசலம் அவர்களை ஆசிரியராகக்கொண்டு, நாளை முதல், 'சுதந்திரம்' தமிழ் தினஇதழ் வெளியிடப்பட இருக்கிறது.

சென்னை எழும்பூர் மாகாண மாஜிஸ்திரேட் முன் விண்ணப்பம் இன்று, திரு. டி சீனிவாசன் அவர்கள், மேற்படி இதழின் வெளியீட்டாளராகப் பதிவு செய்திருக்கிறார்.

மேலிட முடிவே இறுதியானதாம்!

டிக்கட் கிடைக்காத காங்கிரசாருக்கு எச்சரிக்கை

புதுடில்லி, சன. 23—

"காங்கிரஸ் கட்சி டிக்கெட் கிடைக்காத காங்கிரசார், அதிகாரபூர்வமான காங்கிரசாரை எதிர்த்துத் தேர்தலில் போட்டியிடுவார்களேயானால், அவர்கள் இன்னும் ஐந்தாண்டுக் காலத்திற்குக் கட்சி 'டிக்கெட்' தரப்படமாட்டார்கள்"

என்று, காங்கிரஸ் செயலாளர் ஸ்ரீமந்நாராயணன் எச்சரித்துள்ளார்.

இப்போது தேர்தெடுக்கப்பட்டுள்ள அபேட்சகர்கள் பற்றிய முடிவு இறுதியானதென்றும், இதனை மாற்றுவதற்கில்லை என்றும் அவர் ஒரு அறிக்கையில் கூறியிருக்கிறாராம்.

எனவே காங்கிரசார், மேலிடத்தின் முடிவை ஏற்றுக்கொண்டு, எல்லா தகராறுகளையும் மூட்டை கட்டிவைத்துவிட்டு வேலை செய்ய முற்படவேண்டும் என்றும் அவர் அறிக்கை ஒன்றின் மூலம் கேட்டுக் கொண்டிருக்கிறாராம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, தூசியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ.